RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22487

# கிருஷ்ணகிரி மாவட்ட புதிய கற்கால சுவடுகள்

ம. கோபி [அ, *], மா. வெங்கடேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசுகலைக்கலூரி (ஆடவர்), கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா

# Neolithic Traces of Krishnagiri District

M. Gopi [a, *], M. Venkatesan [a]

[a] Department of Tamil, Government Arts College (Mens) Krishnagiri- 635001, Tamil Nadu, India

* Corresponding Author: gopi.m6688@gmail.com

Received: 28-04-2022
Revised: 24-09-2022
Accepted: 07-10-2022
Published: 09-10-2022

Check for updates

## ABSTRACT

Archeology and monuments also help to know the cultural period in Tamil Nadu. The life elements of the people of that time can be seen here through the Paleolithic monuments, inscriptions, kalthitta, kalthitta painting, Thazhi, Ark, Iduthulai etc. in some places in Krishnagiri district. Apart from that, people who died during the Sangam period can be known through archeology and their customs and rituals through the monuments. Some of the rituals of the Sangam lifestyle of the Tamils are still followed in the region today. The purpose of this research paper is to bring out the worship of our ancestors from the Sangam period to the present, the rituals and customs and beliefs of some communities are still alive today. According to this, the above monuments through separate studies convey the news about the culture of the people of Krishnagiri district at that time.

**Keywords:** Glyphs, Inscriptions, Lithic, Lithic Painting

## முன்னுரை

புதிய கற்காலத்தின் வளர்ச்சியடைந்த காலமே பெருங்கற்காலம் ஆகும். கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மக்கள் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டனர். இறந்தவர்களைப் புதைத்து கற்சின்னங்கள் எடுத்ததோடுதம் மூதாதையர்களை வழிபட்டனர். இறந்தவர்களின் ஆன்மா இக்கூட்டத்திற்கு நல்லது செய்யும், என்று எண்ணி ஈமச்சின்னங்கள் உருவாக்கினர். கிருஷ்ணகிரிப் பகுதியில் கல்திட்டை, கல்பதுக்கை,கல்வட்டம், குத்துக்கல், தாழி போன்ற பலவகையான ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றில் கல்திட்டை, கல்பதுக்கை மற்றும் ஈமத்தாழி ஆகியவைகளை இக்கட்டுரையில் எடுத்துக்காட்ட முயல்கிறது.

## கற்பாறைகள் மற்றும் கல்திட்டைகள்

இறந்தவர்கள் திரும்ப வந்து உயிருடன் இருப்பவர்களைத் துன்புறுத்தாமல் தடுக்கவே கற்பாறைகளைச் சவக்குழியின் மேல் மூடி இறந்தவர்களை வழிபட்டு வந்தனர். இந்த கல்திட்டை வடிவமானது நிலத்திற்குமேல் அதாவது தரை மட்டதிதிற்குமேல் அமைக்கப்பட்டிருக்கும். இயற்கையாகக் கிடைத்த பெரிய, பெரியகற்களைக் கொண்டுவந்து நான்கு புறமும் நிறுத்திச் சதுரமாக அல்லது நீண்ட சதுரமாக ஓர் அறை உருவாக்கப்படும் ஒருபக்கத்திற்கு ஒருகல்லோ அல்லது இரண்டு கல்லோ பயன்படுத்தப்பட்டிருக்கும். இவ்வறையின் கீழ் பகுதியில் பெரிய பாறை போன்ற பலகைக் கல்லைக் கொண்டு புதைக்கப்பட்டிருக்கும். சவக்குழியின் மேல் பகுதியில்

ஒன்று அல்லது இரண்டு பெரிய பட்டையான கற்களைக் கொண்டு சவக்குழியின் அறை மூடப்பட்டிருக்கும். இதை மூடிக்கல் என்று அழைப்பர். கற்பலகைகள் கீழேவிழாமல் இருக்க பக்கசுவர்கள் அமைக்கப்படிருக்கும். மூடிக்கல்லைக் கொண்டு மூடப்பட்டபின்னர் இதன் மேல் மண் அல்லதுசிறிய கூழாங்கற்களைக் கொட்டப்பட்டு ஒரு கல் திட்டைப்போல் உருவாக்கப்படும். இதனால் இவை ஒரு பெரிய மேடான கல்திட்டைப் பகுதியாக காணப்படுகின்றது. இவை ஈமச்சின்னஙகளின் ஆரம்பக்கட்ட வளர்ச்சியாகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லசந்திரம், மகாராஜகடை, தளி ஆகியபகுதிகளில் கல்திட்டைகள் இன்றைக்ககும் காணப்படுகின்றன. மல்லச்சந்திரத்தின் அருகிலுள்ள 'தமாராலுபாறை' என்ற மலையின் மேல் பகுதியில் இரண்டு பிரிவுகளாக பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவை சுமார் 200க்கும் மேற்பட்ட கல் திட்டைவகையைச் சாந்த பெருங்கற் காலச் சின்னங்களாக இங்கு காணப்படுகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மகாராஜகடை என்ற ஊரின் அருகாமையில் மலையின் மேல் பகுதியில் முனீஸ்வரர் கோயி;ல் உள்ளது. இதன் அருகில் இயற்கையாக அமைந்த சுனையும் உள்ளது. இங்கு இயற்கை எழில் மிகுந்த சுனையின் அருகாமையில் சிறிய மற்றும் பெரிய என பெருங்கற்கால கல்திட்டைகள் சுமார் 100 இல் இருந்து 150 வரையிலான கல்திட்டைகளை காணமுடிகிறது.

## கல்திட்டையில் வரையப்பட்ட ஓவியங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கல்திட்டைகள் சிலவற்றில் சில ஓவியங்களும் காண முடிகின்றது. அவற்றில் பாறையிலுள்ள ஓவியங்கள் சிவப்பு, வெள்ளை ஆகிய இரண்டு வண்ணங்களிலும் காணப்படுகின்றன. பாறையில் வரையப்பட்டுள்ள சிவப்பு நிற ஓவியங்களின் மேல் வெள்ளை நிற ஓவியங்கள் தெளிவின்றி காணப்படுகின்றன. மற்றொரு இடத்திலுள்ள ஓவியங்கள் பால் உணர்வைத் தூண்டும் ஓவியங்களாகவும் தடித்த உருவங்களாக வரையப்ட்டுள்ள சில ஓவியங்கள் வெள்ளை வண்ணத்தில் உள்ளன.

மனிதவடிவம், விலங்கினங்கள், குதிரைமீது மனிதவடிவம், வேட்டைக் காட்சி, போர் வால், கேடயம் போன்ற வெள்ளைநிற இரண்டாம் நிலைகல்திட்டை ஓவியம் மல்லசமுத்திரத்தில் உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள குருவிநாயனப்பள்ளி என்ற ஊரில் விலங்குவடிவங்கள், மனிதவடிவங்கள், வேட்டையாடும் காட்சி, நீரோடைஆயுதம், கட்டிடவடிவங்கள் போன்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை வெள்ளை நிறகல்திட்டை ஓவியங்கள் உள்ளது. அதேபோல் இம்மாவட்டத்தில் இன்னும் சில இடங்களில் இது போன்ற ஓவியங்களை காணமுடிகின்றன.

## கல்வட்டம்

இறந்தவர்களைப் புதைகுழியில் புதைத்து அதன் மேல் உருண்டையான கற்களை வட்டமாக வைப்பது கல்வட்டம் ஆகும். இவற்றில் கல்பதக்கையை பூமிக்குள் வைத்து மூடியபின்னர் அதன் மேல் கல் வட்டத்ததை அமைக்கும் வழக்கம் உள்ளது. கல்லறைகள் கல்வட்டத்தின் மேல் கல்வட்டம் நடப்பட்டசில இடங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

உட்பகுதியில் உள்ள கல்வட்டம் கரடுமுரடான கற்களை கொண்டும், வெளிப்பகுதியில் உள்ள கல்வட்டப் பலகைகற்களை குறிப்பிட்ட இடைவெளியில் தரையிலிருந்து 10 முதல் 20 சென்டிமீட்டர் உயரத்தில் வெளியல் தெரிகின்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். இத்தகைய கல்வட்டங்கள் இட்டிக்கல் அக்ரஹாரம், குருவிநாயனப்பள்ளி, மூங்கில் புதூர் ஆகிய இடங்களில் உள்ளன. (S.Krishnamurthy, S. Selvarasu, 2005)

சில கல்வட்டங்களில் உயரமான கல் ஒன்று நடப்பட்டிருக்கும். அடிப்பகுதியில் உருண்டு காணப்படும் மேலே செல்லச் செல்ல கூர்மையாக காணப்படுகின்றது.

கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள ஜீனூர் என்ற ஊரில் பேழை வகையைச் சார்ந்த ஈமப்பேழையுடன் கூடியகல்வட்டும் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

## தாழி, பேழை

இறந்தவர்களின் உடல்களை புதைக்கப் பயன்படுத்தப்பட்ட பெரியமண் ஜாடிகளை (தாழிகள்) எனக் குறிப்பிடுவார்கள். தாழிகள் புதைக்கப்பட்டதன் அடையாளமாக ஈமச்சின்னங்கள் நடப்பட்டன. முதுமக்கள் தாழிகள் தமிழகத்தின் தென்பகுதியில் தரைமட்டத்திற்கு மேல் எவ்விதமான அடையாளமும் இன்றிபுதைக்கப்பட்டுள்ளது என்பதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

ஈமத்தாழி வகையினத்தை மட்பாண்டங்கள் செய்யும் தொழில்நுட்பம் வளர்ச்சியுற்ற காலத்தில் தோன்றிய வடிவமாககருதலாம். தாழிகள் மட்பாண்டத்தின் ஒருவடிவம் தாழியின் வாய்ப்பகுதியை அகன்றும் கழுத்துப் பகுதியிலிருந்து கீழ் நோக்கிவயிறுவடிவமாக பெற்றிருக்கும் உடல் பகுதி உருண்டும் தடித்தும் காணப்படும் அடி பகுதியானது கூம்புவடிவமாகவும், அடிப்பகுதியில் மணல் கலந்தமண்ணால் முழுமையாக சுடப்படாத இடமாக அமைந்து இருக்கும். இது போன்ற முதுமக்கள் தாழிகள் கிருஷ்ணகிரிமாவட்டத்தில் அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈமப்பேழை என்பது நீண்ட தொட்டியைபோன்ற அமைப்புடையது ஈமச்சின்னமாகும் பேழையின் அடிப்பகுதியில் இரண்டு முதல் மூன்று வரிசைகள் கொண்டகறக்கள் நான்குமுதல் இரு பத்து நான்கு கற்கள் வரை காணப்படுகின்றன. பொதுவாகபேழைகள் மூடிகளுடன் காணப்படுகின்றன. கிருஷ்ணகிரிவட்டத்தில் உள்ள ஜீனூர் என்றஊரில் ஈமப்பேழை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பேழை மண்ணால் செய்யப்பட்ட கற்களால் நீண்ட தொட்டியை போன்று அமைப்புடைய இந்தப் பேழை வாய்ப் பகுதிய தடித்தும் உருண்டும் காணப்படுகிறது. இப் பேழை நன்றாககசுடபடவில்லை ஜீனூரில் உள்ள கல்வட்டத்திலுள்ள கற்பதுக்கையின் இடையில் இருந்து இந்தப்பேழை எடுக்கப்பட்டது. (Dr.Subramanian ,2013)

இது போன்று சில பேழைகள் இம் மாவட்டத்தில் உள்ள வரட்டனபள்ளி மற்றும் குருவிநாயக்கனபள்ளி ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ஈமச்சடங்கில் படையல் பொருட்கள்

இறந்தவர்களைப் புதைத்தும், புதைத்த இடத்தில் நினைவுச்சின்னம் வைத்தும் இறந்தவர்களுக்கு படையல் பொருட்களை வைத்து வழிபடுவது தென்னிந்தியாவில் வழக்கமான ஒன்றாகும் என்பது தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கிறது. படையல் பொருட்கள் இறந்தவர்களின் ஆவியை மகிழ்விக்க வைக்கப்பட்டவை என்று கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி மட்கலங்கள், இரும்பு ஆயுதங்கள், உலோகப்பொருட்கள், மனிதன் ஆகியவைகள் படையல் பொருட்களுடன் வைத்து வழிப்படுவது வழக்கம்.

கிருஷ்ணகிரி பகுதியில் ஐந்து கால்களுடன் கூடியசாடிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை படையல் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன. சிவப்புநிறம் கொண்ட இந்தசாடிகளின் வாய்ப்பாகம் உருண்டும் தடித்தும் வெளிப்புறம் அகன்றும் காணப்படுகின்றன. வாயப்பாகத்திற்கு கீழே உள்ள கழுத்துப் பகுதியில் அலங்காரத் தோற்த்தில் உள்ளன என்பது குறிப்பிடதக்கது. இத்தகைய சாடிகள், ஈமச்சின்னங்களில் வைக்கப்பட்ட படையல் பொருட்களில் ஒன்று என்பது தொல்லியல் ஆய்வு மூலம் தெரியவருகின்றது.

கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள சாணரப்பன் மலை மற்றும் மயிலாடும் பாறை ஆகிய இரண்டு மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் கல்வட்டங்கள் சென்றாயநாக்கனூர்

வரைசுமார் 100 ஏக்கர் பரப்பில் பரந்துள்ளன. இங்குள்ள கல்லறைகளில் ஈயப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. கல்வட்டத்தின் உட்பகுதியில் மூன்று இடங்களில் மட்கலங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. சிறிய கிண்ணம் ஒன்று தாங்கியின் மேல் வைக்கப்பட்டு மூடிகொண்டு மூடப்பட்டுள்ளது. தாங்கி சிவப்புப் பானை ஓட்டாலும், மூடி கறுஞ்சிவப்பு ஓட்டாலும் ஆனவை, குழியின் உட்பகுதியில் இருந்த பானைகள் இரண்டு இடங்களில் வைக்கபட்டுள்ளன. முதலில் மூன்று மட்கலங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த மட்கலங்கள் நன்கு சுடப்பட்ட கறுப்பு, சிவப்பு மட்கலங்களாகும். இரண்டாம் மட்கலம் சிவப்புப் பானையாகும்.

அதே போன்று இக் கல்லறையின் கிழக்குப் பகுதியில் கத்திகள், அம்புமுனைகள், வாள், கோடரி போன்றவை கிடைத்துள்ளன. தென்கிழக்கு முனையில் நீண்டவாள், சிறிய கத்தி மற்றும் சில இரும்புக் கருவிகள் கிடைத்துள்ளன.

## குழி வடிவங்கள்

கல்திட்டை, கல்பதுக்கையில் மூடுகல்லின் மேற்பகுதியில் பல்லாங் குழிகளைப் போன்ற சிறிய குழிகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த குழிகள் ஒரே அளவானதாகவும், சீரான இடைவெளியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழிகள் அதிக ஆழமற்றுக் காணப்படுகின்றன. கிருஷ்ணகிரிப் பகுதியில் தட்டக்கல், வனசத்திரம் ஆகிய இடங்களில் கல்லறைகளின் மேல் மூடப்பட்டுள்ள மூடுகல்லில் இந்தக் குழிகள் செதுக்கப்பட்டுள்ளன.

## இடுதுளை

பெருங்கற்களைச் சின்னங்களில் காணப்படும் இடுதுளை எனப்படும் துவாரம் தென்னிந்தியாவில் பரவலாகக் காணப்படுகின்றது. பெரும்பாலும் இடுதுளை வட்டவடிவிலும் சிலரு- வடிவத்திலும், சில முறையான வட்டவடிவ இல்லாமலும் காணப்படுகின்றன. வட்ட வடிவ இடுதுளைகள் கிழக்குப் பகுதியிலுள்ள கற்பலகையிலும், கற்பலகையின் மையப்பகுதியிலும் உள்ளன. ரு வடிவ இடுதுளைகள் ஒழுங்கற்ற வடிவங்கள் கல்லின் மேல்பகுதியில் இருக்கின்றன.

பெட்டமுகலாலம் என்ற ஊர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது. இவ்வுருக்கு வடக்கேசுமார் 6 கிமீ தூரத்தில் இருக்கும் காட்டின் நடுவே பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளது. இயற்கையாக அமைந்த பாறையின் மேல் நான்கு கற்பாறைகள் இணைத்து நிறுத்தப்பட்டுள்ளன. இதன் மீது ஒரு மூடுகல் வைத்து மூடப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதியிலுள்ள கற்பலகையில் ரு வடிவ இடுதுளை உள்ளது. இடுதுளைகள் வட்டவடிவில் கிழக்குப் பகுதியிலுள்ள பலகைக் கல்லில் உள்ளன.

பாண்டவர் வீடு என்று அழைக்கப்படுகின்ற பெருங்கற்களா சின்னங்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள கல்வட்டம் ஒன்றில், நான்கு திசைகளிலும் நான்கு கற்பலகைகள் நிறுத்தப்பட்டு இதன்மேல் மூடுகல் ஒன்று பெரிய அளவில் வைத்து மூடப்பட்டுள்ளது. இக்கல்வட்டம் தரையிலிருந்து 1.7-மீ அழுத்தத்திற்குக் குழி வெட்டி உருவாக்கப்பட்டது. இக்குழி மேற்கு கிழக்காகவும் சதுர அமைப்புடனும் காணப்படுகின்றது. கற்பலகைகள் கரடு முரடான பலகைக்கற்களாக உள்ளன. ரு வடிவ இடுதுளை போன்ற அமைப்புடைய கற்பலகை ஒன்று இக்கல்லறையில் மேற்குப் பகுதியில் உள்ளது. இந்த இடுதுளைக்கு இணையாகச் சிறியபலகைக் கல் ஒன்றும் காணப்படுகின்றது.

தருமபுரி-கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த மாவட்டத்தில் மூன்று வகையான இடுதுளைகள் காணப்படுகின்றன. அவை 1.வட்டம் 2.ருவடிவம் 3.முக்கோணவடிவம் கொண்டவை. முக்கோணம் போன்ற அமைப்புடைய இடுதுளை காவிரி ஆற்றின் படுகைப் பகுதியில் கிடைக்கின்றன. வட்டவடிவ இடுதுளை பெரும்பாலும் கல்வட்டங்களிலும், கல்திட்டைகளிலும் உள்ளன. ரு வடிவ

இடுதுளை கிழக்குப் பக்கமுள்ள கற்பலகையின் மேற்பகுதியில் உள்ளது. சில இடங்களில் கற்பலகையின் மையப்பகுதியிலும் காணப்படுகின்றன. இதைப்போன்று இடுதுளைகள் பச்சிகானப்பள்ளி, மலத்தம்பட்டி, பட்டகப்பட்டி தூர்கம் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. (Dr.Subramanian 2012)

இரண்டு இடுதுளைகளை உடைய கல்திட்டைகள் மல்லசந்திரத்தில் உள்ளன. முதல் இடுதுளை கல்திட்டையிலும் கீழ்ப்புற முன் கற்பலகையில் உள்ளது. இரண்டாவது இடுதுளை கல்சுற்றியிம் நிற்கின்ற கற்பலகையில் காணப்படுகிறது.

கிருஷ்ணகிரி பகுதியிலுள்ள பட்டகப்பட்டி, தொகரப்பள்ளி, மயிலாடும் பாறை ஆகிய இடங்களில் கல்வட்டத்தின் மேற்குப்பகுதியிலுள்ள கற்பலகையின் மேல் விளிம்பு சிறிதாக உடைக்கப்பட்டோ அல்லது செதுக்கப்பட்டோ இடுதுளைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (Dr.Parthiban 2010)

## முடிவுரை

தமிழக்த்தில் பண்பாட்டுக் காலத்தை அறிய தொல்லியல் அல்லது ஈமச்சின்னங்கள் உதவுகின்றன. பெருங்கற்படை ஈமச்சின்னங்களின் வழியே அக்கால மக்களின் வாழ்வியற் கூறுகளை அறியலாம். இதன்படி மேற்கண்ட ஈமச்சின்னங்களின் தனித்தனி ஆய்வுகள் கிருஷ்ணகிரி மாவட்ட அக்கால மக்களின் பண்பாட்டு குறித்த செய்திகளை எடுத்துக் கூறுகின்றன.

## References


Krishnamurthy, S., Selvarasu, S. (2005), Archaeological Handbook of mavatta Tamil Nadu, Department of Archaeology, Dharmapuri

Parthiban (2010), Ancient Tracks, Volume -1, Krishnagiri District History Center, Hosur.

Subramanian (2012), Tamil Archeology and Archeology (Tagadur Region) New Century Book House, Chennai

Subramanian (2013), Paleolithic Culture in Tamil Nadu, New Century Book House, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License